கொங்கு

ஆசிரியர்:
புலவர் செ. இராசு

மாசி 2005 | 1974 மார்ச்சு

TANDONI : UNFINISHED CAVE TEMPLE
DISTRICT : TIRUCHIRAPPALLI



கொங்கு

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ

தேனடை 4 — 15—3—74 — தேனீ 3

வணக்கம்

ஒரு சில மாதங்களுக்கு முன் கொங்கு அணியின் சார்பாகப் பல புதிய இதழ்கள் பற்றிய அறிவிப்பு கொடுத்திருந்தோம்.

ஓலைத்தேன், தேனோலை என்ற இரண்டு பெயர்களில் தேனோலை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முதல் இதழ் சித்திரைமாதம் வெளிவரும். ஆண்டுக்கட்டணம் நான்கு ரூபாய் தனி இதழ் ஒரு ரூபாய். இதுவரை வராத ஓலைச்சுவடிகள், பட்டயங்கள், இவற்றின் மூலவாசகம், ஆராய்ச்சிக்குறிப்புகளுடன் வெளிவரும் முதல் இதழ் “மதுக்கரைப்பட்டயம்” என்னும் சுவடியாகும். சந்தா அனுப்பலாம்.

The Historian, The Southern Historian என்ற இரண்டில் பின்னது ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. ஆங்கில ஏடு. அதன் செயல் முறைகள் இன்னும் முடிவாகவில்லை. அதைப் பற்றிய விவரங்களைப் பின்னர் அறிவிப்போம்.

ஆதலின், தேனோலைக்கு ஆண்டுக்கட்டணம் இன்றே அனுப்பி உங்கள் ஆதரவைத் தெரிவித்திடுக.

ஆசிரியர்.

வரலாற்றில் கருவூர்

இரா. நாகசாமி

புகளூர் கல்வெட்டு :

1. ஞகன் மகன் பெருங்கீரன்

2. மூதா அமண்ணன் யாற்றூர் செங்
காயபற்...கோ ஆ...

ல்லிரும்பொறை மகன் பெருங் கடுங்
கோன் மகன்

கடுங்கோன் ளங்கடு ங்கோ
ளங்கோ ஆகி அறுபித கல்.

3. (மூ)தா அமண்ணன் யாற்றூர் செங்
காயபன் உறைய் கோ
ஆதன் செல்லிரும்பொறை மகன்
பெருங்கடுங்கோன் மகன்

(இ)ளங்கடுங்கோ (இ)ளங்கோ
ஆகி ஆறுத்த கல்.

4. யாற்றூர் செங்காயபன்...

5. கொற்றைந்தைள எய் மூன்று.

6 கருவூர் பொன் வாணிகன் நத்தி
அதிட்டானம்.

7. நல்லிபி ஊர் பிடந்தை மகள் கீரன்
கொற்ற......

8. நல்பி ஊர் பிடன் குறும் மகள்
செயிபித பளி,

இன்னும் சில கல்வெட்டுகள் சிதைந்துள்ளன. இக்கல்வெட்டு

களின் எழுத்தமைதி கொண்டு இவை கி. பி. முதல் நூற்றுண்டைச் சார்ந்தவை எனக் கொள்ளலாம்.

இக்கல்வெட்டுகளிலிருந்து பல அரிய செய்திகளை நாம் அறிகிறோம்.

முதலாவதாகக் "கருவூர் பொன்வாணிகன் னத்தி அதிட்டானம்" என்பதைக் காண்போம். இதில் ஒரு பொன்வாணிகன் கருவூரைச் சேர்ந்தவனுகக் குறிக்கப் பெறுகிறுன். கருவூர் இங்கிருந்து பத்துக்கல் தொலைவிற்குள்ளாகவே உள்ளது என்பது சிறப்பாகும். கருவூர் ஆன்பொருநைக் கரையில் இருந்தது என்றும் சங்க இலக்கியத்திலிருந்து அறிகிறோம். இதைக் குறிக்கும் அகநானூற்றுச் செய்யுள் கீழே தரப்பட்டுள்ளது.

'கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திருமாவியல் நகர் கருவூர் முன்துறை'

ஆன்பொருநையாறே இன்று அமராவதி என அழைக்கப்படுகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றுகும் ஆதலின் இங்குக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள கருவூர், சங்கச் சேரரின் தலைநகரும் அருகில் உள்ளதுமான கருவூரே என்பதில் ஐயமில்லை.

இதன் பின்னணியில் மற்றையக் கல்வெட்டுக்களைக் காண்போம். "கோ ஆதன் செல் இரும்பொறை" என்பது சேரனையே குறிக்கும் என்பதிலும் ஐயமில்லை. மூன்று சேர மன்னர்கள் இங்குக் குறிக்கப்படுகின்றனர் 1. கோஆதன் செல்லிரும்பொறை, 2. அவன் மகன் பெருங்கடுங்கோ, 3. அவன் மகன் இளங்கடுங்கோ என்ற மூன்று மன்னர்கள் இங்குக் குறிக்கப்பட்டுள்ளனர். இக்கல்வெட்டுப் பெருங்கடுங்கோ காலத்தது. அவனது மகன் இளங்கோப்பட்டம் எய்தியபோது யாற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்ற சமணப் பெரியாருக்குப் பள்ளி அமைத்துக் கொடுத்ததை இது குறிக்கிறது.

இவர்களது கல்வெட்டுக்கள் கருவூருக்கு அருகில் காணப்படுவதாலும், சங்கப் பாடல் கருவூர், சேரரின் தலைநகர் என்பதாலும், இவர்கள் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்கள் என்பதில் ஐயமிருக்க முடியாது சங்கப்பாடல்களில் பாலை பாடிய பெருங்கடுங்கோவும், மருதம் பாடிய இளங்கடுங்கோவும் குறிக்கப் பெறுகின்றனர். ஆதலின் இவர்கள் பாலைபாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோவாக இருக்கலாம் என்பதில் தவறில்லை.

புறப்பாட்டில் (11) பேய்மகள் இளவெயினி பாலைப் பாடிய பெருங்கடுங்கோவைப் பாடியுள்ளாள். அதில் பெருங்கடுங்கோ ஆன்பொருநை யாற்றங்கரையில் இருந்த வஞ்சி நகரைத் தலைநக ராகக் கொண்டவன் எனப்பாடுகிருள்.

> 'தண் பொருநைப் புனல் பாயும்
> விண் பொருபுகழ் விறல் வஞ்சி'

பாலைபாடிய பெருங்கடுங்கோ கருவூரில் இருந்து ஆண்டவன் எனக்கண்டோம். அக்கருவூர் திருச்சிக் கருவூரே என்பது புக ளூர்க் கல்வெட்டால் வெளிப்படை இப்புறப் பாடலிலிருந்து அக்கருவூரே வஞ்சி என்பதும் தெளிவாகிறது. ஆதலின் சங்க காலச் சேரர்களின் தலைநகராகக் கருவூர்த் திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை. அதுவே வஞ்சி என்பதிலும் ஐயமில்லை.

இரு கிளைவழி மறுப்பு

சிலர் குட்டுவன் வழி என்றும், இரும்பொறை வழி என்றும் சேரர் குடியில் இருவழியிருந்தன என்பர். குட்டுவர் மேலைக்கடற் கரை வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்றும், இரும்பொறையினர் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட னர் என்றும் கூறுவர். சேச அய்யர் அவர்கள் சங்ககாலச் சேர அரசர் என்னும் தமது நூலில் மேலைக்கடற்கரையில் தொண்டி யைத் தலைநகராகக் கொண்டு இரும்பொறை வழி தொடங்கும் என்றும், அவர்கள் கருவூரில இருந்து ஆண்டவர் என்றும் முரண் படக் கூறியுள்ளார். இதைப் பின்பற்றிப் பின்னேரும் இரு கிளைக் குடியினர் இரு இடங்களில் இருந்து ஆண்டனர் எனக் கூறியுள்ள னர். இக் கூற்றுகளுக்குப் போதிய சான்றுகள் இல்லை.

இரும்பொறை எனக் கீழ்வருவோரைக் காண்கிரேம். 1. அந்துவன் சேரலிரும்பொறை, 2. கோப்பெருஞ் சேரலிரும் பொறை, 3. மாந்தரஞ் சேரலிரும்பொறை, 4 இளஞ்சேர லிரும்பொறை. இவர்களில் குடக்கோ பெருஞ்சேரலிரும்பொறை ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும்பொறை என்ற பெயர்களை யும் காண்கிரேம். இவர்களை இரும்பொறை வழியினர் என்று கொள்வோம். இவர்கள் உள்நாட்டுப் பகுதியை மட்டும் கரு வூரைத் தலைநகராய்க் கொண்டு ஆண்டனர் என்ருல், இவர்களுக்கு குடக்கோ என்னும் பெயர் எவ்வாறு பொருந்தும்? பெருஞ்சேர லிரும்பொறையும், இளஞ்சேரலிரும்பொறையும் குடக்கோ என அழைக்கப்படுகின்றனர். இளஞ்சேரலிரும்பொறையின் தந்தை

குட்டுவன் இரும்பொறை என்று பெயர் பெற்றவன். குட்டுவன் மகன் இரும்பொறை என்பது பொருள். ஆதலின் இரும்பொறைக்கும் குட்டுவன் என்ற பெயர் உள்ளதாய்க் காண்கிறோம்.

பாலை பாடிய பெருங்கடுங்கோவின் தலைநகர் வஞ்சி எனப் புறப்பாட்டு 11 கூறுகிறது. பெருங்கடுங்கோ இரும்பொறையின் மகன். "இரும்பொறை என ஒரு கிளைவழி உண்டு. அவர்கள் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார்கள்" என்பதை ஏற்றுக்கொண்டால் மேலைக் கடற்கரையில் இருப்பதாகக் கூறப்படும் வஞ்சி எங்ஙனம் அவன் தலைநகராகும்? செல்வக் கடுங்கோ வாழியாதன் அந்துவன் சேரனின் மகன். ஆதலின் அவனும் இரும்பொறை வழியினன். ஆதலின் அவனும் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கவேண்டும். ஆனால் அவன் வஞ்சியின் தலைவன் எனப் புறம்பாட்டு 387 கூறுகிறது. வஞ்சி மேலைக் கடற்கரையில் உள்ளதாயின், செல்வக் கடுங்கோவும், மேலைக்கடற் கரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கவேண்டும்.

மேற்கூறியவற்றால் "சேரர் குடியில் இரு கிளைகள் இருந்தன ஒன்று குட்டுவன் வழி. அவர்கள் தலைநகராகக்கொண்டு ஆண்ட வஞ்சி மேலைக் கடற்கரையில் இருந்தது. இரும்பொறை வழி என்பது இளைய கிளை, இது கருவூரைத்தலைநகராகக்கொண்டுஆண்டது" என்று கூறும் கருத்துகள ஏற்புடையவை அல்ல என அறிகிறோம். அக்கருத்துக்களுக்குச் சான்றுகள் இல்லை. மாற்றுச் சான்றுகளே உள்ளன. இரும்பொறை என்று பெயர் பெற்றவர்களுக்கு குட்டுவன், ஆதன் என்ற பெயர்களும் உண்டு. பாலை பாடிய பெருங்கடுங்கோ இரும்பொறை வழியினன் என்பதில் ஐயமில்லை எனில் அவன் தலைநகர் கருவூராயிருத்தல் வேண்டும் ஆனால் புறம் (11) அவன் தலைநகர் வஞ்சி எனக் கூறுகிறது. இளஞ்சேரலிரும்பொறை வஞ்சியில் இருந்து ஆண்டான் (பதிகம்) இரும்பொறையினர் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கின்றனர் என இதனால் தெளிவாகிறது. ஆதலின் அனைத்துச் சேரர்களுக்கும் தலைநகராக விளங்கியது வஞ்சியாகிய கருவூரே என்பதும் தெளிவு.

சங்க கால கருவூர்

ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும்பொறை என்னும் அரசனை 'கருவூர் ஏறிய' என அழைக்கப் படுகிறான், 'கருவூர் ஏறிய' என்றால் கருவூரைக் கைப்பற்றியவன் எனச் சிலர் பொருள் கொள்வர்.

எறிதல் எனில் அழித்தல் எனப் பொருள்படும். 'ஏறிய' எனில் அரியணை ஏறிய எனப்பொருள்படும். கருவூரில் முடிசூடிய எனவும் பொருள் கொள்ளலாம். கருவூரை முதன்முதலில் கைப்பற்றிய வன் இவன்தான் என்று சேச அய்யர் பொருள் கொண்டு அதி லிருந்து மேலும் மேலும் கருத்துக்களைக் கூறிக்கொண்டே செல்கி ருர். ஏறிய என்ருல் எறிந்த என்னும் பொருள் கொண்டு அதன் அடிப்படையில் உள்ள கருத்துக்கள் ஐயப்பாட்டுக்கு இடமளிப் பவையாகும்.

சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை என்ற அரசன் கரு வூரில் இருந்து ஆண்டான். அவன் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவருடன் வேண்மாடத்தில் அமர்ந்திருந்தான். அப் பொழுது முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி என்ற சோழமன்னன் தன் யானைமீதர்ந்து கருவூரிடம் வருவதைக்கண்டான் சோழன் யானை மதம்பிடித்து வழிதவறிக் கருவூர் வந்தது; அதைத் தவரு கக் கருதிச் சோழனைக் கொன்றுவிடப் போகிருன் என்று கருதி உடன் இருந்த புலவரான முடமோசியார் உண்மையை எடுத் துரைத்ததாகப் புறப்பாட்டு ஒன்று கூறுகிறது. இதிலிருந்து மற்ருேர் உண்மையும் பெறுகிருேம். கருவூர் சோழ நாட்டின் எல்லைக்கு வெகு அண்மையில் இருந்தது எனத் தெரிகிருேம்.

சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையும் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான்என்றுஅறிகிருேம், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்நெடுஞ்செழியன் தனது மாற்றரசர்களை அவர்களது தலைநகரில் தோற்கடித்தான் எனப் புறம் 78 கூறுகிறது. பழைய உரையாசிரியர் அதற்கு 'தந்தை தம்மூர் என்றது தாம் தோன்றிச் செய்த நகரேயன்றி உறையூரும் கருவூர் முதலாகிய ஊர்களை' எனக் குறிக்கிருர். யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை, பாண்டியன் நெடுஞ்செழியனுல் சிறைப்படுத்தப் பட்டான். பின்னர்ச் சிறை யிலிருந்து நீங்கி மீண்டும் தன் அரியணை ஏறினுன் (புறம் 17). இவன் பாண்டியனுல் பிணிக்கப்படும் முன்னர் மிகவும் வலியுள்ள வனுய் இருந்தான். இவன் சிறையிலிருந்த போதும்கூட இவ னது பகைவர் அஞ்சினர் என இப்பாடல் கூறுகிறது வலிமை மிக்க மாந்தரஞ்சேரலிரும்பொறைக்கும், பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கும் போர் நடந்தது. நெடுஞ்செழியன் சேரனைக் கருவூரிலேயே தோற்கடித்துக் கைது செய்திருக்கவேண்டும். இருப்பினும் சேரன் மீண்டும் தன் தலை நகருக்குத் திரும்பித் தன் ஆட்சியை நிலைநிறுத்தியிருக்கிருன். கருவூர் பாண்டியன ஆட்சியிலிருந்து விரைவில் மீண்டது.

சோழன் நலங்கிள்ளியும் கருவூரைக் கைப்பற்றினன் எனக் கொள்ள இடமிருக்கிறது. அவனைப்பாடும் கோவூர் கிழார் அவன் பூவா வஞ்சியையும் தருகுவன் எனக்கூறுவதிலிருந்து வஞ்சி அவன் ஆட்சியை ஏற்றிருந்தது எனக்கொள்ள ஏதுவுண்டு. இதை உரையாசிரியர் 'பூவா வஞ்சியென்பது கருவூருக்கு வெளிப்படை' எனக் கூறுகிறார்.

கருவூர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனால் முற்றுகையிடப்பட்டது. ஆலத்தூர் கிழார் இதை சிறக்கப் பாடியுள்ளார். இம்முற்றுகையின் போது சேரன் தன் அரண்மனையை விட்டு வெளியே வரவில்லை. சோழர்படை கருவூர்க் காவற்காடுகளை அழித்தது. அவ்வாறு வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்கள் ஆன்பொருநை யாற்றின் மணலைச் சிதைத்தன. சோழன் வஞ்சி மாநகரை வாட்டுவதை நேராகக் கண்ட ஆலத்தூர்க்கிழார் புறம் 36-ல்

> "......சிலம்பில் குறுந்தொடி மகளிர்
> பொலஞ் செய் கழங்கில் தெற்றியாடும்
> தண்ணான் பொருநை வெண்மணல் சிதைய"

எனப் பாடுகிறார்.

கிள்ளிவளவன் கருவூர் முற்றியிருந்த போது அதை நேராகக் கண்டமற்றொரு புலவர் மாறோக்கத்து நப்பசலையாரும், சோழன் ஆற்றலைப் பாடியுள்ளார் (புறம் 37-39). அப்பாடலில் கருவூரைச் சுற்றி ஆழ்ந்த அகழிகள் இருந்தன அவற்றில் நீர் மிகுந்திருந்தது, அவற்றில் முதலைகள் சுற்றித் திரிந்தன, அவ்வூரை நீ அழிக்கிறாய் எனவும், "உயர்ந்த எல்லை அறியப்படாத பொன்படுகின்ற நெடிய சிகரங்களையுடைய இமயமலையின் கண் சூட்டப்பட்ட காவலாகிய வில்பொறியையும், மாட்சிமைப்பட்ட தொழில் பொருந்திய தேரையுமுடைய சேரன் அழிய, அவனது அழிவில்லாத கருவூரை அழிக்கும் நினது பெருமை" எனவும் பாடியுள்ளார்.

> "இமயஞ் சூட்டிய ஏம விற்பொறி
> மாண்வினை நெடுந்தேர் வானவன்
> தொலைய; வாடா வஞ்சி
> வாட்டு நின் பீடு"

எனப் பாடுகிறார், இக்கருவூர்ப் போரில் சேரன் தோற்றான்.

குராப்பள்ளியில் துஞ்சிய கிள்ளிவளவனும் கருவூரைக் கைப் பற்றியிருக்கிருன். புறப்பாட்டு 373, குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூர் எறிந்தானைக் கோவூர் கிழார் பாடியது. இப்பாட்டில்

வஞ்சி முற்றம் வயக்களனுக
அஞ்சா மறவர் ஆட்போர்
பழித்துக் கொண்டனை பெரும''

எனக்குறித்துள்ளார். இதலிருந்து கருவூர் எறியப்பட்டது என அறிகிருேம். கருவூரும் வஞ்சியும் ஒன்றே என்பதும் இதனுல் பெறப்படுகிறது.

பெருஞ்சேரலிரும்பொறை தகடூர் மீது படையெடுத்தான். அப்படையெடுப்பு கருவூரிலிருந்து தொடங்கியிருக்க வேண்டும்.

சேரன் செங்குட்டுவனின் தலைநகர் வஞ்சியே என்பதில் ஐய மில்லை. செங்குட்டுவனைப் பாடும் பரணர் காவிரியாற்றேடு ஆன் பொருநையும் குடவனுறும் கலக்கும் கூடல் போன்றவன் என்று பதிற்றுப்பத்தில் பாடுகிருர். கூடல் என்பது இப்பொழுது கரு ஆரிலிருந்து ஆறுகல் தொலைவில் உள்ளது. ஆதலின் அதன் புகழ் பாடப்பட்டுள்ளது. இதிலிருந்து ஆன்பொருநையாறு காவிரி யாற்றில் கலக்கிறது என்பது தெளிவு. இதுவே இப்பொழுது ஆம்பராவதி என்று அழைக்கப்படுகிறது, செங்குட்டுவன் ஆண்ட வஞ்சி ஆன்பொருநைக்கரையில் இருந்தது எனச் சிலம்பு கூறுகிறது.

''வாழியரோ வாழி வருபுனல் நீர் ஆன்பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான் தன் தொல்குலமே.''

— சிலப்பு — வாழ்த்து 4

ஆதலின் சேரன் செங்குட்டுவன் ஆண்டதும் கருவூரே என்பதில் ஐயமில்லை.

சங்க காலச் சேரமன்னர் அனைவரும் ஆண்டது கருவூரே யாகும்.

கருவூர் ஆனிலையப்பர் திருக்கோயில் குடநீராட்டுவிழா மலர் (3–2–74)

(கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன)

எர்காட் நோய்
(ERGOTISM)

S. தன்பாகுமார் M. Sc.

செய்தித்தாட்களில், குறிப்பிட்ட உணவினை உட்கொண்டவர்கள் பிணியுற்று அவதிப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பெரும்பாலும் நோயுற்றத் தாவரங்களிலிருந்து (கூலவகையினைச் சார்ந்த) தயாரிக்கப்பட்ட உணவில் நோய் காரணியின் பகுதிகள் கலக்கபபடுவதால் உயிருக்கு ஆபத்து நேரிடும். மனிதனுக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றனையும் தந்து உதவும் தாவரங்களின் வகைகளில் ஒன்று பூஞ்சைகள் (Fungi) ஆகும். இவை மனிதனுக்குப் பயன்படும் உணவுத் தாவரங்களைத் தாக்கி சேதம் விளைவிக்கக் கூடியவை. ஆனால் சில பூஞ்சைகள் மருந்தாகவும், உணவாகவும் பயன்படுகின்றன. மருந்தாகப் பயன்படக் கூடிய பூஞ்சை தவறுதலாக உணவாக உட்கொள்ளப்படின் பிணி ஏற்பட்டு உயிரிழக்க நேரிடும், குறுகிய வாழ்நாளும் திடீரென தோன்றியவைகளையும் குறிப்பிட 'காளான்' பூத்தமாதிரி என சொல்லுவர். மற்றும் தமிழ் இலக்கியங்களில் பூஞ்சைகளை 'ஆம்பல்' என்னும் வார்த்தையினால் குறிப்பிட்டுள்ளார்கள் புலவர்களின் வறுமையினைக் காட்டும் இடங்களில் 'அடுப்பில் காளான் காணப்படுகிறது' என்பர், இதனால் பலநாட்களாக அடுப்பு எரியவில்லை என்பதும் அதற்குத் தேவையான பொருட்கள் இல்லை என்பதும் பெறப்படுகிறது. கிரேக்க ரோமானிய பழம் நூல்களிலும் இவற்றைப்பற்றி நிரம்ப செய்திகள் உள்ளன சில நச்சுப் பூஞ்சைகளைக்கொண்டு மன்னர்கள் கொல்லபபட்டுள்ளார்கள்.

இவ்வாறு குறிப்பிடப்படும் பூஞ்சை தாவரங்களில் ஒன்று எர்காட் (Ergot) என அழைக்கப்படும் பூஞ்சையாகும். இதன் தாவரவியல் பெயர் கிளாவி செப்ஃ (Claviceps) என்பதாகும். சில மாதங்களுக்கு முன் மராட்டிய மாநிலத்தின் நகர் ஒன்றில் கம்பு உணவு உட்கொண்ட விடுதி மாணவர்கள் பிணியுற்று அவதிப்படுவதாக செய்திவந்தது நினைவிருக்கலாம். இதற்கு 'எர்காட்' எனப்படும் பூஞ்சை தாக்கிய தாவரங்களிலிருந்து தயாரிக்கப் பட்ட உணவே காரணமாகும். இது பெரும்பாலான கூலவகை

(கம்பு, கோதுமை தினை) தாவரங்களைத் தாக்கி அவற்றில் தான்ய மணிகளுக்குடபதிலாக தனது இனப்பெருக்கத்திற்கான அல்லது ஒவ்வாத சூழ்நிலையினை தாங்க ஏதுவான அமைப்புகளை தோற்று விக்கும். பூக்களில் சூற்பை (Ovary) தாக்கப்பட்டு விதைகளுக் குப்பதிலாக எர்காட் அல்லது ஸ்கிளிரோசியம் (Sclerotium) எனும் பகுதி வெளிப்படும். இவை பெரும்பாலும் நிலத்தில் விழுந்துவிடும் அல்லது தான்யமணிகளை பிரித்தெடுக்கையில் கண்டெடுக்கப்பட்டு அப்புறப் படுத்தப்படுகின்றன. இவ்வாறு செய்யப்படாவிடில் தான்யங்களுடன் கலந்து பின்னர் மாவு தயாரிக்கையில் உடன் சேர்ந்து உணவாக உட்கொள்ள நேரிடின் 'எர்காட்டிசம் (Ergotism) எனும் நோய் உண்டாகும். பெரும்பா லான மேலைநாடுகளில், முன்னேற்றமற்ற முறைகளினால் மாவு தயாரிக்கப்படுகையில் எர்காட்டிசம் அடிக்கடி ஏற்பட்டது. இன்று நவீன முறைகள் இதனை தடுத்துள்ளன. நோயுற்ற தாவ ரங்களை உட்கொள்ளும் விலங்குகள் பாதிக்கப்படுகின்றன.

எர்காட் எனப்படும் இப்பகுதியில் பலவித அல்கலாய்டுகள் (Alhaloids) உள்ளன. இவையே எர்காட்டிசம் எனப்படும் எர்காட் நோயிற்கு காரணமாகும், இந்தநோயினால் தாக்கப்பட்டோர் வாந்தி. உயர்வெப்பம், குளிர், தசைகளில் வலி, கை கால்களில் கொப்புளங்கள், முகத்தில் மஞ்சள் நிறம் தோன்றுதல், போன் றவைகளினால் அவதியுறுவர் பலருக்கு மனநோய் (hysteria) ஏற்ப டும். இந்நோயினை உண்டாக்கும் அல்கலாய்டுகளாகிய எர்கோ டைமன் (ergotamine) எர்கோமெட்டிரைன் (ergometrine) சில நபர்களில் தொய்வு தசைகளைத் தூண்டி பரிவு நரம்பு (sympathetic) மண்டலத்தினை செயலற்றுப்போக செய்கின்றன. மற்றும் சிலரில் கை, கால்கள் சோர்ந்து செயலற்றுப் போகலாம்.

எர்காட்டிசம் நோயிற்குக் காரணமாகிய இதே எர்காட் மருத்துவத்தில் பல வகைகளில் பலன் தருகிறது. மருந்தாக உதவும் இதனை உணவாக உட்கொண்டால் ஆபத்து உயிரினை போக்கவல்ல இதே அல்கலாய்டுகள் சரியான அளவில் தேர்ந்த முறையில் பயன்படுத்தப்பட்டால் உயிரினை காக்கவல்லவை. நவீன மருத்துவத்தில் மகப்பேறு காலத்தில் கருப்பை (uterus) சுருங்கி குழந்தையினை வெளியேற்றவும், பின்னர் தன் பழைய நிலையினை அடையவும் பயன்படுகின்றன. கருப்பை தசைகளை தூண்டி செயல்பட வைக்கின்றன. இதுமட்டுமின்றி ஒற்றை தலைவலி (migraine headache) இரத்த ஓட்ட சம்பந்தப்பட்ட

வியாதிகளைக் குணப்படுத்தவும் எர்காட்டின் அல்கலாய்டுகள் பயன்படுகின்றன. இக்காலத்தில் L. S. D. என்றழைக்கப்படும் d-லைசெர்ஜிக் அமிலம் டை எதலமைடு (d-lys rgic acid diethylamide)ம் எர்காட்டிங் காணப்படுகிறது. இது இல் பொருள் மருட்காட்சி, வண்ண அமைப்புகள், குரல்கள் ஆகிய வற்றை தோற்றுவித்து உடல் கனம் அதிகரித்திருப்பது போன்ற உணர்வினை கொடுக்கும். இந்நிலை நரம்பு மண்டலம் தாக்கப்படுவதால் ஏற்படுகிறது. இத்தகைய உணர்வினை செயற்கை பொருட்களால் வரவழைத்து அனுபவிப்பது இன்றைய மேலை நாட்டுப் பண்பாட்டில் சாதாரணமாகிவிட்டது இயற்கையில் L. S D. பலவற்றில் காணப்படுகிறது. இவற்றில் ஒன்று எர்காட் ஆகும். அடிக்கடி L. S. D. உட்கொண்டால் நிலை தடுமாறி மனநோய் போன்றவை ஏற்படலாம்.

இவ்வாறு இப்பூஞ்சை பல நோய்களுக்கு மருந்தாகவும் சில நோய்களுக்கு காரணமாகவும் உள்ளது. மருந்தாக பயன்பட வேண்டியதை உணவாக உட்கொண்டால் ஆபத்து நேரிடுகிறது

—※—

குறிப்பு : இக்கட்டுரையில் உள்ள ஆங்கிலச் சொற்களுக்கு நல்ல தமிழ்ச்சொற்கள் அறிந்தோர் எழுதுக ஆசிரியர்

ஈழத் தமிழ்

கண்ணகை	—	கண்ணகி
ஒப்பேற்றுதல்	—	சரிவரச்செய்தல்
முற்றாக	—	முழுவதும்
முற்றவெளி	—	மைதானம்
போத்துகேயர்	—	போர்ச்சுகீசியர்
பிரித்தானியர்	—	பிரிட்டன்காரர்
சீமேந்து	—	சிமிட்டி (cement)

சனவரி	பெப்புருவரி	மாச்சு
ஏப்பிறல்	மே	யூன்
யூலை	ஓகத்து	செத்தெம்பர்
ஒக்தோபர் (ஒற்றோபர்)	நவெம்பர்	திசெம்பர்

பல்பறைத் தொழுதி

புலவர் முத்து. எத்திராசன் B. A.

" பருவத் தேனசைஇப் பல்பறைத் தொழுதி
உரவுத்திரை பொருத திணிமணல் அடைகரை
நனைந்த புன்னை மாச்சினை தொகூஉம்
மலர்ந்த பூவின் மாநீர்ச் சேர்ப்ப "..........எனவரும் குறுந்

தொகை—175ஆம் பாடலில் 'புன்னையினது மலர்களை விரும்பி வரும் பலவாகிய வண்டினங்கள்', என்று கூறுகிறார் ஆசிரியர் உலோச்சனார். 'பல்பறைத் தொழுதி' என்ற சொல்லின் மூலம் பூவினுடைய தேனை உண்ணவரும் உயிர் இனங்களை பொதுவாகச் சொல்லிவிடுகிறார்.

இதேபோன்று பதிற்றுப்பத்திலும் 'பூத்த முல்லை புதல்சூழ் பறவை' (பதிற்-66 வரி-16) என்ற சொற்றொடர்மூலம் தேனுண்ணும் இனங்களைப் 'புதர்சூழ் பறவை' என்று பொதுப்படையாக காணப்படுகிறது.

ஆனால் என்னென்ன இனங்கள் தேனை உண்ண வருகின்றன என்பதனை நாம் இலக்கியங்களில் தெளிவாகக் கண்டோமில்லை உரையாசிரியர்களும் பொதுப்படையாக தேனீ, வண்டென்னும் சொற்களால் தேன் உண்பவைகளைக் கூறியிருக்கின்றார்கள்.

வண்டின் பெயர்களை தொகுத்துக்கூறும் சேந்தன் திவாரக நிகண்டு,

" அளியேஇ கேசரம் அறுபதம் கழுதொடு,
வரியே சுரும்பு, கீதன், சூதம்,
அரி, மா, பிரமரம், அராபதம், வரிக், கடை
பிரசம். தும்பி, மதுகரம், மிஞிறு,
விரவிய தேனீ வண்டெனப் படுமே"—என்று வண்டிற்

குரிய பெயர்களாக எடுத்துக்காட்டுகிறது.

ஆனால் சங்க இலக்கியங்களில் தேனை உண்ணவரும் உயிரினங்கள் தும்பி, வண்டு, தேனீ, சுரும்பு, புள், பிரசம், சிதர், பறவை, மிஞிறு (ஞிமிறு) அரி போன்றவைகள் என நமக்கு எடுத்துக் கூறுகின்றன. இவைகளெல்லாம் தேனை உண்ணவரும் பல்வேறு

உயிரினங்களாகும் அவைகள் யாவை என்பதை வெளிப்படை யாகக்கூறினும் இன்று வழங்கும் அவைகளின் பெயர்கள் அக்கால வழக்கத்திலின்று பெரும்பாலும் மாறுபட்டு இருப்பதாலும் ஒரு சில பெயர்கள் வழக்கற்று போனதாலும் அவைகளைப்பற்றி பிற் காலச் சான்றோர்கள் எடுத்துக் கூறுமையாலும் இக்காலத் தவர்க்கு அவைகள் யாதெனப் புலப்படாமல் மறையும்படியாகி விட்டது. அவைகள் யாவை என்பதையும் அவைகளுக்கு இக் காலத்தில் வழங்கும் பெயர்கள் என்னவென்பதையும் எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. வண்டு

வண்டினை இக்காலத்தவர் வண்டென்றே அழைப்பர். தேன் உண்பதனை தேன் வண்டு என்று அழைப்பதை நாமறிவோம். ஆனால் வண்டு என்ற சொல பெரும்பாலும் பெண் தேனியைக் குறிக்கும் சொல் என,

கூதிர் முல்லைக் குறுங்கால் அலரி
மாதர் வண்டொடு சுரும்புபட முடித்த
இரும்பல் கூந்தலை -(நற்றிணை-366) என்ற

பாட்டில் காணப்படும் மாதர் வண்டுக்கு பெண் வண்டு என்றும் சுரும்பு என்பதற்குஆண் வண்டு என்றும் உரை காணப்படுகிறது. மேலும் மாதர் வண்டு மருட்ட-(பெருங்கதை-33) என்ற வரியில் காணப்படும் மாதர் வண்டு என்பதற்கு காதல் வண்டு என்றும் பெண்வண்டு என்றும் உரை கூறியிருப்பதாலும் வண்டு என்னும் சொல் பெண் ஈயைக் குறிக்கிறது.

சேந்தன் திவாகரம் ஆண் வண்டின் பெயர் 'சுரும்பு' எனக் கூறுவதை இங்கு உற்று நோக்கவேண்டும்.

வரிவண்டார்ப்பச் சூட்டி (அகம்-269)
ஆடுசிறை வரிவண்டோப்பும் (பதிற்று-62-வரி 18)
வரியணி சிறகின் வண்டுன மலரும்-(நற்றிணை-399)

எனவரும் வரிகளில் வரிகளையுடைய வண்டு என்று கூறுவதால் பெண் தேனீ வரிகளையுடையது எனத் தெளிவாகிறது. (மேலும் புலிப்பொறிக்கொண்ட பூநாறு குழுஉச்சுவல் வரி வண்டு",-(நற் றிணை-249) என்ற வரியில் புலியினது வரியைக்கொண்ட நல்ல நிற

முள்ள வரியமைந்த வண்டுகள் என்று பெண் வண்டின் அமைப் பினை எடுத்துக்காட்டுவது மேலே கூறியவற்றிற்கு வலியுடைய தாய் அமைகிறது.

" வண்டு படுபு இருளிய தாழிருங் கூந்தல்
சுரும்புண விரிந்த பெருந்தன் கோதை '—(அகம்-131)

என்பனபோன்ற வரிகளால் பெண் வண்டு, ஆண் வண்டுகளை எடுத்துக் காட்டியிருப்பதை காணமுடிகிறது.

" பொறிவரி இனவண்டார்ப்ப "—(அகம்-164)
" பொறிவரி இளவண்டு ஊதல் கழியும் "—(அகம்-166)

இவ்வரிகளில் ஆணும் பெண்ணுமாகிய வண்டுகள் புள்ளிகளையும் வரிகளையும் உடையது என அறிவதால் ஆண் வண்டு புள்ளிகளை உடையது என்பதை அறிய முடிகிறது. ஏனெனில் இனம் என்ற சொல் ஆண் வண்டை குறிக்கலாம் அல்லவா. பெண் வண்டின் இசை யாழிசைப் போன்றதென்று பின்வரும் வரிகள் மூலம் நாம் காணலாம்

" யாணர் வண்டினம் யாழிசைப் பிறக்க '—(பரிபாடல்-21)
" மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய "—(மணிமேகலை)
" வல்லோன் தைவரும் வள்ளுயிர்ப் பாலை
நரம்பார்த் தன்ன வண்டினம் முரலும் "—(அகம்-355)

சுரும்பின் இசை மருதப்பண்ணின் இசையைப் போன்றதென் பதையும் பின்வரும் பரிபாடல் ஒன்று மிக அழகாக எடுத்துக் காட்டுகிறது.

" பூவூது வண்டினம் யாழ் கொண்ட கொளைகேண்மின், கொளைப்பொருள் தெரிதரக் கொளுத்தாமல் குரல் கொண்ட, கிளைக்குற்ற உழைச் சுரும்பின் கேழ்கெழு பாலை இசையோர்மின்", —பரி–11ஆம் பாடல்) வண்டின இசையை அசுணம் என்னும் இசைப்பறவை கேட்கும் என்பதனை

" மாதர் வண்டின் நயவருந் தீங்குரல்
மணநாறு சிம்பின் அசுணம் ஓர்க்கும் "—(நற்றிணை-244)

என்ற பாடல் மூலம் அறிகிறோம். மேலும் வண்டின் கூட்டம் எழுப்புகின்ற ஓசை, புலியோசையோ என்ற அச்சமுற்று பல முறை இழுத்தும் நிறுத்திய இடத்தல் நில்லாமற் தேரிற் பூட்டிய குதிரைகள் ஓடும் என்பதனை

" வரிவண் டூதலிற் புலிசெத்து வெரீஇப்
பரியுடை வயங்குதாள் பந்தின் தாவ "—(நற்-249)

என்ற பாடல் எடுத்துக் காட்டுகிறது. ஃ

கலவை

1. Deka—இலத்தீன் சொல் பத்தைக் குறிக்கும். decalitre—பத்து லிட்டர். decade-பத்து ஆண்டுகள். இலத்தீன் சொல்லில் வரும் K. ஆங்கிலத்தில் C என்ற எழுத்தாவது இயல்பே. December என்ற மாதத்தைக் குறிக்குஞ் சொல்லில், Deca என்ற சொல் உண்டு. ஆகவே. இம்மாதம் பத்தாவது மாதமாக இருக்க வேண்டும். ஆனால் பன்னிரண்டாவது மாதமாக இருக்கிறது.

அதற்கான காரணியத்தைக் காண்போம். உரோமானியர் காலத்தில் மார்ச்சு மாதந்தான் முதன் முதலாக இருந்தது. அதை வைத்துப் பார்க்கும்போது திசம்பர், பத்தாவது மாதமாக வரும். 1852 ஆம் ஆண்டு முதல்தான், சனவரி முதல் மாதமாகக் கொள்ளப்பட்டது. இதுபோலவே, அக்தோபர் (Octo-Eight), நவம்பர் (Novem-nine), செப்டம்பர் (Septem-Seven) ஆகியவை இருந்தன. ஆனால், இவை முறையே 10. 11, 9 ஆகிய மாதங்களாக வழங்கப்பட்டு வருகின்றன.

2. Radar-என்ற சொல்லைத் தமிழில் சேணளவிஎன்று மொழி பெயர்த்துள்ளனர். அதாவது, சேண் + அளவு. சேய்மை (தொலைவு)யில் உள்ளதை அளக்கும் கருவி.

Radar என்ற சொல் ஓர் ஆங்கிலத் தொடரின் சுருக்கமே அத்தொடராவது, Radio Detention And Ranging-என்பதாகும் சேணளவி என்பதை சேணுணர்வி என்றால் பொருத்தமாக இருக்கும்என்று தோன்றுகிறது.

3. 1985-ஆம் ஆண்டில் சப்பானிய நாட்டினர், தொடர் வண்டிகளை மணிக்கு 500 கி. மீ. வேகத்தில் ஓட்டிவிட ஆய்வு நடத்தி வருகின்றனர். இதில் பயணஞ் செய்தால் உடை அழுக்காகாது. வண்டி எள்ளளவும் ஒலியின்றி ஓடும். இவ்வண்டிகளுக்குப் ' பறக்கும் கனவுத் தொடரிகள் '' (Flying dream trains என்று பெயரிடவுள்ளனர்.

4. யூகலிப்ட்சு மரத்தின் எல்லா உறுப்புகளும் பயன்படுகின்றன. இதனை முதன் முதலில் நீல மலையில் உண்டாக்கியவர்

பகாட்டன் என்பவராவார். ஆனால் தொடக்கத்தில் சரியாக வளராமல் அழிந்துபோயின பின் 1863-இல் ஆளுநர் வில்லியம் டென்னிசன் என்பவர் பரவலாகப் பயிரிட்டுப் பயன்பெறச் செய்தார்.

5. 1970-71-ஆம் ஆண்டில் இசுரேல நாட்டில் 90 இலட்சம் புத்தகங்கள் வெளியிடப்பெற்றன. இது அந்நாடு 1969-70 இல் வெளியிட்டதைவிட 6 இலட்சம் அதிகம். உலகில் அதிக நூல்கள் வெளியிடும் நாடுகளில் இசுரேல் மூன்றாவது இடத்தைப் பெறுகின்றது.

6. ஒன்பது என்ற எண்ணுக்கு பழம் பெயர் தொண்டு என்பதாகும். தொண்டு என்ற சொல், ஒன்பதைக் குறிக்குமாறு மலைபடுகடாம் (தொண்டு படுதிவவு-வரி 21) என்ற நூலில் வழங்கப் பெற்றுள்ளது. இச்சொல் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கற்றுவிட்டது. அவர் காலத்திற்கு முன் 9, 90 900, 9000 என்பன முறையே, தொண்டு, தொண்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என வழங்கிற்று. தொண்டு என்ற ஒன்றுமிடப் பெயர் வழக்கற்றதனால், தொண்பது ஒன்றுமிட எண்ணிற்கும், தொண்ணூறு பத்தாமிட எண்ணிற்கும் தொள்ளாயிரம் நூறுமிட எண்ணிற்கும் வழங்கலாயிற்று. தொண்பது, தொன்பதாகிப் பின் ஒன்பதாக மருவிற்று. ஒன்று முதல் பத்துவரையுள்ள எண்களை எழுத்தால் எழுதினால் ஒன்பது மட்டுமே இரு சொற்களின் இணைப்பு. மற்றெல்லாம் ஒரே சொல் இதனைக் கூர்ந்து நோக்கின் உண்மை விளங்கும். ஃ

கொங்கு

தனி இதழ்		0-30
ஆண்டுக்கட்டணம்	ரூ.	3-50
மூண்டுண்டுக்கட்டணம்	,,	10-00
ஆயுட்கட்டணம்	,,	100-00
ஆய்வுத்தேன்	,,	4-00
கொங்கு தொகுதிகள் 1, 2, 3		5-00

நிர்வாகி, 'கொங்கு'
26, இந்திராநகர், சென்னை-600020.

உரிமை வேட்கை.

பொங்கல் மலர் 1974,

தரமான கட்டுரைகளுடன் விளங்கும் எழில்மிக்க மலர் பாவாணரின் '' தமிழின் தனியியல்புகள் '' தனித்தன்மை பெற்றது அண்ணாவின் 'திராவிட நாடு' தொடக்கப்பற்றிய கட்டுரை இன்றைக்கும் பொருந்துவது வியப்பே பெரியார் 100 ரூபாய் நன்கொடை அளித்த கடிதம் அசல் வடிவில் வந்துள்ளது. கொண்டல் சு.மகாதேவன் அவர்களின்'' தமிழ் எழுத்துக்கு தலைப்புள்ளி வேண்டுமா'' சிறந்த கட்டுரை. இந்து மதம் பற்றிய ' காந்தியார் பெரியார் '' உரைநடை அறிய விருந்து. தலைவர்களின் மூவண்ண படங்கள், நல்ல கதைகள், அழகான ஓவியங்கள், சிறந்த ஒளிப் படங்கள் அனைத்தும் மலருக்கு எழில் சேர்க்கின்றன.

விலை மூன்றே ரூபாய்.

தென்குமரியின் புதைந்த வரலாறு
The Forgotten History of the Land's End

S. பத்மனுபன்

குமரிக்கண்டத்தில் மூழ்கியது போக எஞ்சியது குமரிமுனை தொடங்கிய தமிழகம். முக்கடலும் சூழ்ந்துள்ள குமரிமுனையும், நாஞ்சில் நாடும் வரலாற்றில் பல முதன்மையான தகுதிகளைப் பெற்றுள்ளன. அவற்றில் பல இவ்விரு நூல்களிலும், விரிவாகத் தெளிவாக ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன,

வரலாற்று ஆராய்ச்சிப் போக்கு சிறந்த முறையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஔவையார், திருவள்ளுவர், பஃறுளி, குமரிக்கோடுபற்றிய கருத்துக்கள், விரிந்த ஆராய்ச்சிக்கு அடித்தளம் அமைகின்றன.

ஆசிரியரின் பலதுறைப் புலமை, ஆராய்ச்சிப்போக்கில் எதிரொலிக்கின்றன. குமரி மாவட்டத்தின் விரிந்த வரலாருக இருப்பதோடு, தொன்மைத் தமிழக வரலாற்றில் பல தெளிவுகளையும் கொண்டுள்ளன. விலை ரூ 4 (தமிழ்) ரூ. 2 (ஆங்கிலம்)

கிடைக்குமிடம்: குமரன் பதிப்பகம்

20, மாநில பாங்கு குடியிருப்பு, நாகர்கோயில்-1.

வாசகர் நோக்கு :

தி. நா. அறிவுஒளி

அன்புடையீர்,

கொங்கு (பிப்ருவரி, '74) இதழில் வெளிவந்த திரு கொடுமுடி ச. சண்முகன் அவர்களின் 'இருமொழி தட்டச்சு' என்னுங் கட்டுரை அறிவுக்கு விருந்தாயமைந்திருக்கக் கண்டேன். ஆய்வறிஞர் சண்முகம் அவர்களை மிகவும் பாராட்டுகிறேன். 'புதியன கண்டபோது விடுவரே புதுமை காண்பார்?' இருமொழி எழுத்துக்களும் ஒரு தட்டச்சில் அமைவது ஆக்கமளிக்கக்கூடியதேயாகும். தாங்கள் செய்துள்ள மாற்றங்கள் 'பண்டித மனப்பான்மையினருக்கு' வெறுப்பளிக்குமாயினும், காலத்தினால் செய்த நன்றியிஃதெனப் புதுமை நெஞ்சினர் போற்றி ஏற்பர் இவ்வமைப்பில் காணும் குறைகள் கால இசைவிற்கேற்ப களையப்பெறுவதும் இயல்வதே. வடமொழிக் கிரந்த எழுத்து முறையை மீண்டும் தமிழில் திணிக்க முயல்வது விரும்பத்தக்கதன்று. கால ஓட்டத்தில் இதனால் மொழித்துறையில் வேண்டா முடிவுகளுக்கும் கொள்கைகளுக்கும் இடமேற்பதற்கும், மறைமலையடிகளார், தேவநேயப்பாவாணர் முதலியோர் கட்டிக்காத்து வளர்த்துவரும் தமிழ் நெறிக்கு ஊறு விளைவிக்கக்கூடும். ஆயினும், தட்டச்சில் மட்டும் இவ்வெழுத்துச் சீர்மை யமைய வேண்டியிருத்தலின், இது குறித்து என் கருத்தையும் நீங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது தக்கதன்றோ ?

ி, ீ என்னும் இவ்வெழுத்துக்களை அமைக்க உதவும் 'சுழி கொம்புகளை' இடப்புறம் முன்னதாக அடித்துப் பின் உயிர்மெய்யெழுத்தை அடித்து 'கு, கூ' ஆகியவற்றை உணர்த்தினால் என்ன? அவ்வாறு அமைப்பதால், புதிய திணிப்பு வடிவங்களான '‍ ‍' இவை தேவைப்படாதன்றோ?

கற்பிப்பதற்கும் இஃது எளிதாகும். ? ' என்னும் சுழி கொம்புகள் மெய்யெழுத்துகளின் வலப்புறமிருந்தால் இகர ஈகர உயிர்மெய்களாகவும், மேற்சுழி கொம்புகள் இடப்புறமிருந்தால் உகர, ஊகார உயிர்மெய்களாகவும் அமையும். இதுமேலும் எழுத்துச்சுருக்கமும், முயற்சி எளிமையும் உடையதேயாகும்.

இத்தகைய புதுமைக் கருத்துகள் மெல்ல மெல்லவே நாட்டில் இடம் பெறக்கூடும். கல்லாமையும், அறியாமையும் பெரும்பாலோர் நெஞ்சிற் கூடுகட்டிக் கிடக்கும் நம் நாட்டில் சீர்திருத்தங்கள் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படா என்பது இயற்கையே. ஆயின், ஆய்வுத்துறையில் பல்வகை முயற்சிகள் தோன்ற வேண்டும். பழமைவாய்ந்த தமிழின் மரபுக்கும், இலக்கண நெறிக்கும் முரணில்லாவகையில் புதியன புகுதல் வேண்டற்பாலதே. ஆயின் இப்புதுமை தமிழ்ப்பகைக்கு ஆக்ககளிப்பதாக அமைதல் விரும்பத்தக்கதன்று அறிஞர் கொடுமுடி. சண்முகன் அவர்களின் சீரிய முயற்சியில், எனது சிறிய மாறுதலும் இணையுமாயின் மேலும் எளிமை அமையும். ஆயினும் தமிழ்ப்பேரறிஞர் பலரும் ஆய்ந்து முடிபு காணவேண்டியதிதுவாகும் என்பதையும் இங்கு நான் சுட்டியாக வேண்டும்.

நண்பரின் ஆர்வத் தொண்டும், ஆய்வுத் தொண்டும் மேன்மேலும் செழிக்கவேண்டும். மிக்க நன்றி. அன்பன்

தி. நா. அறிவுஒளி

குறிப்பு: உகரத்திற்கும், ஊகாரத்திற்கும் ஒட்டுக்குறிபோட தமிழுலகம் இசைவு தந்தால் போதும் எந்தக்குறி என்பதை தமிழறிஞர்களே தேர்ந்தெடுக்கலாம்.

கொங்கு தொல்லெழுத்து வரிசை

பேளூர் சின்னஏரிக் கல்வெட்டு

(இரண்டாவது)

அமைவு:- சேலம் மாவட்டம் சேலம் வட்டம் பேளூருக்கு தென்கிழக்கில் உள்ள சின்ன ஏரியில் உள்ள இரண்டு மதகுகளில் வட புறம் உள்ள மதகருகில் காணப்படுப்படுவது.

மொழி:- தமிழ்

காலம்: குலோத்துங்க சோழர்

கண்டுபிடித்தவர்: புலவர் புது. போ. வேங்கடராமன்

வாசகம்:

ஸ்வஸ்திஸ்ரீ கொலோத்துங்க சோ
ழ தேவறகு யாண்டு 41 வது
மிலாடாகிய ஜநநாத வளநாட்டு
த் துறவி நாட்டு வெளியூரா
ன ஏரியில் ஏறி
வீர பட்டணத்து வண்ணான் பி
ச்சன் சொக்கன்
இடு வித்த தூம்பு.

குறிப்பு: இதில் குறிக்கப்பட்டுள்ள வண்ணான் பிச்சன் சொக்கன் முன் கல்வெட்டில் குறிக்கப்பட்ட வண்ணாத்தி தாழி வடுகியின் கணவன். அக்காலத்தில் பேளூரின் பெயர் 'வெளியூர்' என்பது அவ்வூருக்கே 'வீரப்பட்டணம்' என்ற பெயரும் உண்டு. வீரப்பட்டணம் என்பது கடல்கடந்து வாணிபம் செய்த வியாபாரிகள் வாழ்ந்த பேரூர்.

முதலாம் இராசேந்திர சோழன்

ம. இராசசேகரத் தங்கமணி M. A., B. T.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள 472 பக்க நூல் (ரூ 9. 15), முதலாம் இராசேந்திர சோழனைப் பற்றிய எல்லா விவரங்களையும் தொகுத்தும் பகுத்தும் தருகின்றது. பல சிறிய செய்திகள் கூட நுணுகி ஆராயப் பட்டுள்ளன. கல்வெட்டுச் செய்திகளையும், இலக்கியச் செய்திகளையும் ஒப்பிட்டு, சிறந்த முறையில் ஆக்கபபட்டுள்ளது வரலாற்று மாணவர்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும், பொது வாசிப்புக்கும் ஏற்ற நூல்.

கொங்கு திங்களிதழ் உரிமை அறிக்கை

1 வெளியிடும் இடம்	:	26, இந்திரா நகர், சென்னை-600020
2. பருவம்	:	மாதம் ஒன்று
3. அச்சிடுபவர்	:	திருமதி து. இராஜலட்சுமி இந்தியர் நான்காவது முதன்மைச் சாலை இந்திரா நகர், சென்னை-600020
4. வெளியிடுபவர்	:	திருமதி. சண்முகப் பிரகதம் இந்தியர் 26, இந்திரா நகர், சென்னை-6000 20
5. ஆசிரியர்	:	புலவர் செ இராசு
	:	இந்தியர்
	:	5, என்ஜிஓ குடியிருப்பு ஈரோடு
6. உரிமையாளர்	:	திருமதி, சண்முகப்பிரகதம் உரிமையாளர 26, இந்திரா நகர், சென்னை-600 020

சண்முகப் பிரகதம் ஆகிய நான் மேலே தந்துள்ள எல்லா விவரங்களும் நான் அறிந்து நம்பிய அளவுக்கு உண்மை என்று அறிவிக்கின்றேன்.

ச. பிரகதம்
வெளியிடுபவர்

நாள் 15-3-74

Phone Office : 83745 Resi : 811455

RAVI METAL WORKS

Manufacturers of

Automobile Agricultural Components

Sanitary & Pump Fittings

3/129, Dr. Natesan Road,

Triplicane : : MADRAS-600005

மலேசியா & சிங்கப்பூர்

சிங்கப்பூர், மலேசியாவில் நமது நிருபரும் முகவரும் :

M. P. Swamy

Singapore Tamils Movement
Anna Illam, 35. Norris Road
Singapore-8

ஆண்டுக்கட்டணம் 2. 50 வெள்ளி

இலங்கை

இலங்கையில் நமது முகவர்.

மு. சச்சிதானந்தம்

'பத்மனகம்'
சங்கானை. (அஞ்சல்) இலங்கை

ஆண்டுக்கட்டணம் இலங்கை ரூபாய் 5/-

மேற்கண்ட முகவர்களுக்கு 'மணி ஆடர்' மூலம் தொகை அனுப்பினல் மாதாமாதம் கடல்வழியாகப் புத்தகம் அஞ்சலில் வந்து சேரும்.

--நிர்வாகி, கொங்கு

அட்டைப்படம்

தாந்தோனி மலைக்குகை

கட்டுரை அடுத்த இதழில்

திட்டம்

திட்டக் கமிஷன் சார்பில் தமிழில் வெளியிடப்படும்
படங்கள் நிறைந்த இருவார இதழ்

- *நடப்புப் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றியும் இந்தியாவின் வளர்ச்சிப் பணிகள் பற்றியும் தலைசிறந்த நிபுணர்கள் நடுநோக்குடன் எழுதும் கட்டுரைகள்.*
- *திட்டத்தின் பல்வேறு துறைகளில் நமது வெற்றி, தோல்விகள் பற்றிய ஒளிவு மறைவற்ற மதிப்பீடு.*

சந்தா

ஆண்டு ரூ. 5. இரண்டாண்டு ரூ. 9. மூன்றாண்டு ரூ. 12.
தனிப் பிரதி 25 பைசா

- *நகர நியூஸ்-ஏஜண்டுகளுக்கு விற்பனையில் தாராள தள்ளுபடியும் வாபஸ் வசதிகளும் உண்டு.*
- *விளம்பரங்களுக்கு மிகவும் சக்திவாய்ந்த சாதனம்*

யோஜனா சந்தாதாரர்கள் எல்லோருக்கும், ஆங்கிலம், ஹிந்தி அல்லது பிராந்திய மொழிகளில், 5 ரூபாய் அல்லது அதற்குமேற்பட்ட மதிப்புள்ள எமது வெளியீடுகளை வாங்கினால் விசேஷ 20% சலுகை கிடைக்கும்.

சந்தா ஆர்டர்களுக்கும், வர்த்தக விவரங்களுக்கும், விளம்பர விகிதங்களுக்கும் எழுதவும் :

ஆசிரியர்-நிருபர்,
திட்டம்
பப்ளிகேஷன்ஸ் டிவிசன்,
கிரவுண்ட் ஃப்ளோர், பிளாக் எண் 2
சாஸ்திரிபவன், 35, ஹாடோஸ் ரோடு
சென்னை - 600006 (தமிழ்நாடு)

daup 73/608

ஆசிரியர் : புலவர் செ. இராசு
அச்சிட்டவர் : து. இராஜலட்சுமி
ரேணுகா பிரிண்டர்ஸ், சென்னை-600020
வெளியிட்டவர் : ச. பிரகதம்
அலுவலகம் : 26, இந்திரா நகர், சென்னை-600020.